www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 2nd Term Examination - 2022

FWC

| நாடகமும் அரங்கியலும் Drama & Theater | Three Hours / Gr -12 (2023) | 58 | T | I,II |
|---|---|---|---|---|

### பகுதி I

- ❖ **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடைகளைத் தெரிவு செய்க.**

01. ‘அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதுமே கலை’ எனக் கூறியவர்?
1) அரவிந்தர் 2) தாகூர் 3) பரதர்
4) மாசேதுங் 5) எரிக் நியூட்டன் ( )

02. ‘தூய உள்ளுனர்வின் வெளிப்பாடே கலை’ எனக் கூறியவர்?
1) குரேசு 2) அரிஸ்ரோட்டில் 3) எரிக் நியூட்டன்
4) ஹகல் 5) பல்ஸ்ராய் ( )

03. பின்வருவனவற்றில் ‘மனவெளியில் கண்டு’ கற்பனை செய்து இரசிக்கும் கலை வடிவம்.
1) நடனம் 2) இலக்கியம் 3) இசை 4) நாடகம் 5) சினிமா ( )

04. பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று.
1) ஓவியம் 2) கட்டிடம் 3) நாடகம் 4) சிற்பம் 5) இலக்கியம் ( )

05. உடல் அசைவுகள், சைகைகள், மெய் நிலைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அபிநயம்
1) ஆஹார்யம் 2) ஆங்கீகம் 3) ஸாத்விகம் 4) வார்ச்சிகம் 5) பிராந்தியாயம் ( )

06. ‘அரங்கு’ என்பதற்கு பொருத்த கூற்று.
1) ஆற்றுகை நிகழும் இடம். 2) ஆற்றுகைக்குரிய செயற் தொகுதி.
3) கல்லால் அமைக்கப் பெற்ற கட்டடம். 4) ஆற்றுவோர் பார்ப்போர் இணையும் இடம்.
5) பார்த்தலுக்குரிய வெளியும் செயலும். ( )

07. அரங்கொன்றில் பார்ப்போரின் இரசனையின் உடனடி வெளிப்பாடாக அமைவது.
1) விமர்சனங்கள் 2) விவரணங்கள் 3) பதிற்குறிகள்
4) சனத்திரள் 5) பாராட்டுக்கள் ( )

08. ‘பீக்கிங் ஒப்பேரா’ நாடக மரபின் பிறப்பிடம்
1) ஜப்பான் 2) திபெத் 3) இத்தாலி 4) சீனா 5) இந்தியா ( )

09. பின்வரும் நாடகம் பற்றி கூற்றுக்களில் அடியார்க்கு நல்லாரின் கூற்று.
1) நாடகம் வாழ்வின் ஒரு துண்டம்.
2) கதை தழுவி வரும் கூத்து.
3) உலக நடைமுறைகளைப் போலச் செய்வது.
4) யாதேனும் ஒரு செயலைப் போலச் செய்தல்.
5) வாழும் சூழலால் வரும் ஆற்றுகை முறையின் தொகுப்பு. ( )

10. பின்வருவனவற்றில் ‘கதை சொல்லும் கலைகளாக’ இருப்பவை.
1) இசை, நடனம் 2) வில்லிசை, கதாபிரசங்கம் 3) சிற்பம், ஓவியம்
4) நாடகம், நடனம் 5) பேச்சு, விவரணம் ( )

11. கிரேக்க ரஜடி நாடகங்களில் உரையாடலுக்குப் பயன்படுத்தப்பட்டவை?
1) அகவஹ்பா 2) வெற்றுக் கவிதை 3) இயாம்பிக் கவிதை
4) வசன கவிதை 5) வெண்பா ( )

12. பின்வரும் நாடகங்களில், சோபோகிளிஸின் நாடகம் அல்லாதது.
1) அஜெக்ஸ் 2) எலெக்ரா 3) அகமென்ன
4) அன்ரிக்கனி 5) ஈடிப்பஸ் அற்கொலோனஸ் ( )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. கிரேக்கத்தில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கதைகளை வைத்து நாடகம் ஆக்கியவர்.
1) ஈஸ்கலஸ் 2) சோபாகிளிஸ் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோபென்ஸ் 5) மெனான்டர் ( )

14. கிரேக்க "திறஜெடி" தோன்றியது.
1) கோமுஸ் ஊர் வலத்தில் இருந்து 2) டித்றாம் பாடலில் இருந்து
3) லிங்கப் பாடல்களில் இருந்து 4) குரலை பாடலில் இருந்து
5) கிரேக்க புராணங்களிலிருந்து ( )

15. கிரேக்க ரஜடியில் 'கோரஸ்" பிரநிதித்துவம் செய்வது.
1) நடிகரை 2) சமூகத்தை 3) பாத்திரங்களை
4) தெய்வங்களை 5) நாடகத் தயாரிப்பாளரை ( )

16. கிரேக்க அரங்கில் நடிகர்களின் எண்ணிக்கையை 1 - 1 வரை அதிகரித்தவர்கள் முறையே.
1) தெஸ்பிஸ், சோபோகிளிஸ், ஏஸ்கலஸ் 2) ஏஸ்கிலஸ், சோபோகிளிஸ், யூரிப்பிடிஸ்
3) தெஸ்பிஸ், ஏஸ்கலஸ், அரிஸ்ரோபென்ஸ் 4) அரியோன், தெஸ்பிஸ், ஏஸ்கலஸ்
5) தெஸ்பிஸ், ஏஸ்ககலஸ், சோபோகிளிஸ் ( )

17. கிரேக்க ரஜடி நாடகங்களில் பெரும்பாலும் மரணச் சம்பவங்கள்.
1) போலச் செய்து காட்டப்படும் 2) செய்தியாளனால் சொல்லப்படும்
3) பாயிரத்தால் இசைக்கப்படும் 4) நேரடியாக நிகழ்த்தப்படும்
5) கோரசினால் கூறப்படும் ( )

18. கிரேக்க திறஜெடியின் கதைச் சூழ்வின் பிரதான அம்சம்
1) பின்னோக்கு 2) மாற்ற முடியாத விதி 3) கவலை
4) பாடல் 5) மகிழ்வழிப்பு ( )

19. ஐரோப்பிய நாடக வரலாற்றில் கிடைக்கப்பெற்ற எழுத்துருக்களில் மிகவும் பழமையான நாடக எழுத்துருவாகக் கருதப்படுவது.
1) பேர்சியன்ஸ் 2) அன்ரிக்கனி 3) சப்பிளையன் வுமன்
4) இடிப்பஸ் றெக்ஸ் 5) அகமெம்னன் ( )

20. கிரேக்க நாடகங்களுடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களை கருதுக.
அ) தெய்வங்களுக்கும் மனிதர்களுக்குமான முரனை கூறுவது.
ஆ) அக்கால அரசியல் நிலமைகளை கிண்டல் செய்வது.
இ) துன்ப வாழ்வை துணிவோடு ஏற்க வேண்டும் என்ற பக்குவத்தினை வலியுறுத்துவது.
ஈ) கற்பனை அழகும் மொழி வளமும் நிறைந்தது.
மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் 'ரஜடி' பற்றிய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி.
1) அ,ஆ,இ 2) அ,இ,உ 3) அ,இ,ஈ 4) ஆ,இ,உ 5) ஆ,ஈ,உ ( )

21. உலகப் புகழ் பெற்ற அன்னத்தடாகம் (Swan lake) என்னும் நாடகம் எவ்வகைமை சார்ந்தது.
1) ஒப்பேரா 2) நூர்ந்தி 3) பலே 4) கதகளி 5) ரஜடி ( )

22. அதிகளவான காதல் சுவையினைக் கொண்டிருக்கும் வடிவம்.
1) தொன்பாங்கு 2) வாசாப்பு 3) வடபாங்கு 4) வடமோடி 5) தென்மோடி ( )

23. "பலே" வடிவம் தோற்றம் பெற்ற நாடு
1) இத்தாலி 2) பிரான்ஸ் 3) சீனா 4) இந்தியா 5) பிரித்தானியா ( )

24. ஆசிரியர் விரும்புவதை பார்வையாளரிற்கு முழுமையாக வழங்கும் நபர்
1) தயாரிப்பாளர் 2) நெறியாளன் 3) நடிகன்
4) ஒளியமைப்பாளர் 5) மேடை முகாமையாளர் ( )

25. நாடக எழுத்துருவினை வியாக்கியானம் செய்யும் கலைஞன்
1) நடிகன் 2) காட்சி விதானிப்பாளன் 3) நெறியாளன்
4) தயாரிப்பாளன் 5) நாடக ஆசிரியர் ( )

26. கருத்தூன்றல் அவதான பயிற்சிகளிற்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு
1) ஆடும் வீடும் 2) கோழி கோட்டான் 3) பழக்கலவை
4) கரடியும் கிராம மக்களும் 5) நண்டு, இறால், மீன் ( )

27. பின்வருவனவற்றில் குரல் பயிற்சியாக அமையத்தக்க அரங்க விளையாட்டு
1) குருட்டு ஆட்டோ 2) ஆடும் வீடும் 3) பலக்கலவை
4) பொன் முட்டை 5) குலை குலையாய் முந்திரிக்காய் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28. தியேட்டர் என்பது அடிப்படையில்
   1) மகிழ்விக்கும் இடம்   2) பாதர்க்கும் இடம்   3) கூடும் இடம்
   4) உரையாடும் இடம்   5) விளையாடும் இடம்   (    )

29. புனை கதை ஒன்றில் இருந்து நாடக எழுத்துரு வேறுபடுவது.
   1) கதை சொல்லும் வடிவம்   2) பாத்திரங்கள் காணப்படும்
   3) சொற்களால் ஆக்கப்பட்டிருக்கும்   4) சம்பவங்கள் காணப்படும்
   5) பாத்திரங்கள் பேசும்   (    )

30. நாடக ஆசிரியரின் உணர்வினைப் பார்ப்போருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்.
   1) நெறியாளன்   2) தயாரிப்பாளர்   3) நடிகர்
   4) இசையமைப்பாளர்   5) ஒளிவிதானிப்பாளர்   (    )

31. மஹாகவியின் “கோடை” நாடகத்தினை முதன் முதலாக நெறியாள்கை செய்தவர்.
   1) நா. சுந்தரலிங்கம்   2) அ. தாசீசியஸ்   3) மஹாகவி உருத்திர மூர்த்தி
   4) இளைய பத்மநாதன்   5) அ. பாலேந்திரா   (    )

32. கோடை நாடகத்தில் நாடகத்தின் மீது விருப்புக் கொண்ட பாத்திரம்
   1) கணேசு   2) முருகப்பு   3) காசி   4) கமலி   5) செல்லம்   (    )

- **இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வருகின்ற பின்வரும் உரையாடலை அடிப்படையாகக் கொண்டு 33, 34, 35 ஆம் வினாக்களுக்கு விடை அளிக்குக.**

  “அவர் கொலை செய்யப்பட்டார் அறியப்படாத கொலையாளியை நாம் நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதே கடவுளர் கட்டளையின் தெளிவான அர்த்தமாகும்”

33. இக்கூற்றினை கூறியவர்
   1) டயோனிசியஸ்   2) செய்தியாளன்   3) கிறியோன்
   4) கோரஸ்   4) இடிப்பஸ்   (    )

34. இக் கூற்றின் படி கொலை செய்யப்பட்டவர்
   1) சியுஸ்   2) லேயஸ்   3) பொலிபஸ்
   4) கட்மஸ்   5) எத்தியோகிளிஸ்   (    )

35. அறியப்படாத கொலையாளியாக கட்டப்படுபவர்
   1) கிறியோன்   2) அன்ரிக்கனி   3) இடிப்பஸ்
   4) பொலிபஸ்   5) எத்தியோகிளிஸ்   (    )

- **36 – 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்படும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை அளிக்குக.**


(அ)


(ஆ)


(இ)


(ஈ)

36. பின்வருவோரில் கிரேக்க நாடக ஆசிரியரைக் குறிப்பது.
   1) அ   2) ஆ   3) இ   4) ஈ   5) உ   (    )

37. பின்வருவோரில் கோடை நாடக ஆசிரியரைக் குறிப்பது.
   1) அ   2) ஆ   3) இ   4) ஈ   5) உ   (    )

38. பின்வருவோரில் இராவணேச நாடக ஆசிரியராகவும் மூலகர்த்தாகவும் கருதப்படுபவர்கள முறையே
   1) அ, இ   2) இ, ஈ   3) அ, ஆ   4) அ, ஈ   5) அ, உ   (    )

39. ஆற்றுகை கலையாக ஏற்க முடியாதது.
   1) பலே   2) ஒபேரா   3) கூத்து   4) ஓவியம்   5) இசை   (    )

40. துன்பம் நிறைந்த காட்சிகளை எடுத்துக் கூறும் நாடகம்
   1) விகட நாடகம்   2) அவலச் சுவை நாடகம்   3) சற்றயர் நாடகம்
   4) வீர நாடகம்   5) மகிழ்நெறி நாடகம்   (    )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி – II

❖ **பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக?**

## பகுதி - A

01. 1) ''கலை'' என்றால் என்ன? (3 புள்ளிகள்)
 2) 'கலை' 'கைவினை' இரண்டுக்குமான வேறுபாட்டை விளக்குக. (5 புள்ளிகள்)
 3) மேலைத்தேச கலைக்கோட்பாடுகளுக்கும் கீழைத்தேச கலைக் கோட்பாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க. (7 புள்ளிகள்)

02. 1) 'சடங்கு' என்பதனால் நீர் கருதுவது யாது? (3 புள்ளிகள்)
 2) கிரேக்க 'ரஜடி' யின் தோற்றத்தில் சடங்கின் செல்வாக்கை மதிப்பிடுக. (5 புள்ளிகள்)
 3) கிரேக்க ரஜடியின் வளர்ச்சியில் 'சோபோகிளிசின்' பங்களிப்பினை விளக்குக. (7 புள்ளிகள்)

03. 1) நடிப்பு செயற்பாட்டில் 'செய்தல்' என்பதற்கும் செய்து காட்டல் என்பதற்குமான வேறுபாடு யாது? (6 புள்ளிகள்)
 2) ஒரு நடிகன் பாத்திரமொன்றினை ஏற்பதில் இருந்து அதனை அரங்கில் நிகழ்த்துதல் வரையான படிமுறை செயற்பாடுகளை விபரிக்குக. (9 புள்ளிகள்)

## பகுதி - B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

04. 1) சோபோகிளிஸின் ''இடிப்பஸ் மன்னன்'' நாடக பாடத்தில் வருகின்ற பாத்திரங்களை எழுதுக. (3 புள்ளிகள்)
 2) இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் அரங்கிற்கு புறத்தே செயல்களை தருக. (4 புள்ளிகள்)
 3) 'இடிப்பஸ்' பாத்திரமானது விதியினால் துரத்தப்படும் பாத்திரம் என்பர். அதனை உதாரணத்துடன் விளக்குக. (8 புள்ளிகள்)

05. 1) கோடை நாடகத்தின் பிரதான முரணைக் கூறி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனங்களில் ஏற்படுத்திய பாதிப்பினை சுருக்கமாக விளக்குக. (7 புள்ளிகள்)
 2) மாணிக்கம், செல்வம், சோமு ஆகிய பாத்திரங்களின் பாத்திரங்களின் இயல்புகளையும், அவை மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் நாடக பாட உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் விரும்பிய மூன்று விடயங்களுக்க சிறு குறிப்பு எழுதுக..
 1) பலே
 2) ஒப்ரோ
 3) கூத்து
 4) ஒஸ்கலஸ்
 5) மஹாகவி

(3 x 5 = 18 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!